உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவம்.

மலர் 4. | காலயுத்தி௵ சித்திரை௴-1918௵ ஏப்ரல்௴ | இதழ் 4.

பொன்வண்ணத் தந்தாதி.

கொடிமே லிடபமுங் கோவணக் கீளுமோர் கொக்கிறகு
மடிமேற் கழலு மகலத்தி னீறு மைவாயரவு
முடிமேன் மதியு முருகலர் கொன்றையு மூவிலைய
வடிவேல் வடிவு மென்கண்ணு ளெப்போது வருகின்றவே.

சிவஞான போதம்.

நான்காஞ் சூத்திரம்.

(52 ஆவது பக்கத் தொடர்ச்சி.)

மூன்று மதிகரணம்.

ஆன்மா அமைச்சரசேய்ப்ப நின்று அஞ்சவத்தைத்தே.

(இ - ள்.) ஆன்மா மந்திரிமாரோடு கூடிய அரசனைப்போல் (அந்தக்கரணங்களோடு கூடி) நின்று ஐந்து அவத்தைகளை யுடைய தாம். (எ - று.)

இதில் 1-வது—தன்னுற் கூறப்படும் பொருள் :—ஆன்மா கருவிகளோடு கூடி ஐந்தவத்தையுறும்.

2-வது—ஐயப்பாடு— ஆன்மா கருவிகளோடு கூடியபோது ஐந்தவத்தைப்படுமோ, படாதோ.

3-வது—பிறர் கூறும் பக்கம்—இருளில் அகப்பட்டகண் விளக்கோடு கூடியபோது விடயங்களைக்காண்டல் மாத்திரமன்றி வெவ்வேறு அவத்தைப்படுதல் இல்லை. அதுபோல் மலத்திலகப்பட்ட உயிர் கருவிகளோடு கூடியபோது ஒருதன்மைத்தா யறிதலன்றி,

ஐம்புலனறிந்தும், ஒடுக்கம் அறிந்தும், உண்டிவினையின்றிக் கிடந்தும், உணர்த்த உணர்ந்தும் இவ்வாறு வெவ்வேறு அவத்தைப் படுதலில்லை. அன்றியும் ஆன்மா அஞ்சவத்தைப் படுமாயின் அது வியாபகப் பொருளாதல் கூடாது. (இது அந்தக்கரணான்மவாதிகள் பக்கம்.)

4-வது—மறுத்துரைக்குஞ் சித்தாந்தத்துணிபு— சகசமலத்தினால் அறிவு தொழிற்படாதிருந்த ஆன்மா கருவிகளோடு கூடி அக்கருவிகளும் தானும் அமைச்சரும் அரசனும்போல் நிற்றலால், மந்திரிமுதலிய பரிவாரங்களோடு பவனி சென்ற அரசன் தன்மாளிகைக்குட் செல்லுங்கால் வாயில்தோறும் நிறுத்தவேண்டியவர்களை நிறுத்திக் காவலும் வைத்து அவர்களைப் பிரிந்து அந்தப்புரத்திற் செல்வதுபோல், தத்துவங்களைக் கூடிப்பிரியும். அவ்வாறு கூடிப் பிரியும் முறையில் அவ்வான்மா சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் என்னும் ஐந்து அவத்தைகளை யடையும். ஆன்மா மலத்தால் மறைப்புண்டு அவ்வாறு அஞ்சவத்தைப்படினும் தான் அருவுடம்பாகிய தத்துவசொரூபியா யிருத்தலால் அதன் வியாபகத்திற்கு இழுக்கில்லை.

5-வது—இயைபு—உதாரண வெண்பா.

ஒன்றணையா மூலத் துயிரணையு நாபியினிற்
சென்றணையுஞ் சித்த மிதயத்து—மன்றவே
யையைந்தா நன்னுதலிற் கண்டத்தின் வாக்காதி
மெய்யாதி விட்டகன்று வேறு.

(அன்வயம்.) நல்நுதலில் வாக்காதி மெய்யாதி மன்றஏய் ஐயைந்தாம். கண்டத்தின் (வாக்காதி மெய்யாதி) விட்டு அகன்று வேறு (ஐயைந்தாம்). இதயத்தில் சித்தம் சென்று அணையும். நாபியினில் உயிர் அணையும். அணையா மூலத்து ஒன்று என இயையும்.

(இ - ள்.) நல்நுதலில்=சாக்கிரத்தானம் எனப்படும் இலாடத்தில்—வாக்காதி மெய்யாதி மன்ற ஏய்=வாக்கு பாதம் பாணி பாயுரு உபஸ்தம் என்னும் கன்மேந்திரியம் ஐந்தும், மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஞானேந்திரியம் ஐந்தும், ஆகிய புறவிந்திரியம் பத்தையும் தேற்றமாகப் பொருந்திய—ஐயைந்து=சத்தம் பரிசம் ரூபம் இரசம் கந்தம் என்னும் சத்தாதி விஷயம் ஐந்தும், வசனம் கமனம் தானம் விசர்க்கம் ஆனந்தம் என்னும் வசனாதி

ஐந்தும், பிராணன் அபானன் வியானன் சமானன் உதானன் நாகன் கூர்மன் கிருகரன் தேவதத்தன் தனஞ்சயன் என்னும் பிராணுதி வாயு பத்தும், மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் அந்தக்கரணம் நான்கும், புருஷனும், ஆகிய இருபத்தைந்தும்—ஆம் = (ஆக முப்பத்தைந்து கருவிகளும்) தொழிற்படுவனவாம்.—கண்டத்தின் (வாக்காதி மெய்யாதி) விட்டு அகன்று வேறு ஐயைந்தாம் = சொப்பனத்தானம் எனப்படும் கண்டத்தில், வாக்குமுதலிய கன்மேந்திரியம் ஐந்தும் மெய்முதலிய ஞானேந்திரியம் ஐந்தும் தொழிற்படாமல் விட்டு அகல, சத்தாதிவிடயம் ஐந்தும், வசனுதி யைந்தும், அந்தக்கரணம் நான்கும், புருடன் ஒன்றும், பிராணுதி வாயு பத்தும் ஆக இருபத்தைந்து கருவிகளும் தொழிற்படுவனவாம்.—இதயத்தில் சித்தம் சென்று அணையும் = சுழுத்தித் தானமாகிய இருதயத்தில் சித்தம் பிராணன் புருஷன் என்னும் மூன்று கருவிகளும் தொழிற்படும்.—நாபியினில் உயிர் அணையும் = துரியத்தானமாகிய உந்தியில் பிராணவாயு புருஷன் என்னும் இரண்டும் தொழிற்படும்.—அணையாமூலத்து ஒன்று என இயையும் = இக்கருவிகளொான்றும் அணையாத துரியாதீதத் தானமாகிய மூலாதாரத்தில் புருஷன் ஒன்றே தொழிற்படும். (எ-று.)

இவ்வாறு துரியாதீதத்திலே மலத்தோடுமாத்திரம் சம்பந்தப்பட்டு அறிவின்றிப் புருஷன் நிற்பது கேவலாவத்தை யென்னப்படும்.

(இன்னும் வரும்.)

பரமதபங்க விஞவிடை.

(71-வது பக்கத்தொடர்ச்சி.)

இவ்வாறு உபதேசித்தருளிய சைவாசாரியரை அவரது சந்நிதியில் வந்திருந்த புறச்சமயிகளில், உலகாயதனெழுந்து சில கேட்கத் தொடங்கினன்.

உலகாயத மதபங்கம்.

உலகாயதன். ஐயா, நீர் இப்போது சொல்லிவந்த விஷயங்களைக் கேட்டிருந்தேன். உம்முடையவார்த்தை செவிக்கினியதாயிருந்தாலும் அதை நம்பக்கூடவில்லை.

கடவுளொருவ ரிருக்கின்றாரெனவும், அவர் மெய்யறிவினை யுடையவரெனவும் பிரஸ்தாபித்தது வெறும் பொய். அப்படியொரு கடவுளிருந்தால், அவர் ஏன் காணப்படவில்லை? காணப்படாத கடவுளை உண்டு என்பது யாங்ஙனம்?

சைவர். கடவுளில்லையென்று சொல்பவர் ஏகதேசிகள். பெரும்பாலார் கடவுளுண்டென்றே கூறுகின்றார்கள். "உலகத்தாருண்டென்ப தில்லென்பான் வையத் - தலகையாவைக்கப் படும்" என்றார் பெரியோர். இதனை யுய்த்துணர்ந்து அடங்கி வாழ்வீராக.

உ. எம்மை நீர் அலகையென்றீர். கடவுள் ஏன் காணப்படவில்லை யென்றதற்கு விடைகூறுகிலீர். இது தருமந்தானா?

சை. தீயவொழுக்க முடையாரை அலகையென்று விலக்குவது தருமந்தான். கடவு ணிந்தையைக் காட்டிலுந் தீமையாது? "தெய்வமிகழேல்" எனவும், "தெய்வஞ்சீறிற் கைதவமாகும்" எனவும் ஔவையாரருளிச்செய்த தறிந்திலீர்போலும். இனி, கடவுள் ஏன் காணப்படவில்லை யென்பதற்கும் விடையளிக்கின்றோங் கேளும்.

உ. அதிக சந்தோஷம், அப்படியே சொல்லுமையா.

சை. நீர் கடவுள் காணப்படவில்லை யென்றது உமது கண்ணுக்கே யன்றோ?

உ. ஆம்.

சை. உமது கண்ணுக்குப் புலப்படாமையால், கடவுள் இல்பொருளாகாது. ஏனெனின், கண்ணுக்குக் காணப்படாத பொருள்கள் இன்னும் பலவுள. அவை மனம் ஆன்மா முதலியன. இவற்றுள், மனம் என்பது அந்தக்கரணம். இவ்வந்தக்கரணம் கண்ணுக்குக் காணப்படாமையால், இதனை இல்பொருளென்றிடல்கூடாது. இனித்தேகேந்திரியாதிகளை விசாரித்திடின், தேகம் ஒன்றினையுங்காணாது. அத்தேகத்தைக் கண் காணும். அக்கண்ணைக் கரணங்கள் காணும். அக்கரணங்களை ஆன்மாக்காணும். அவ்வான்மாவைச் சிவம்காணும். இனிச் சிவத்தை ஆன்மாக்காணாது. இவ்வான்மாவைக் கரணங்கள்காணா. இக்கரணங்களைக் கண்காணாது. இக்கண்ணைத் தேகங்காணாது. இன்னு மிதனை விரிப்பின், கண்

தேகத்தைமாத்திரங்காணும். கரணங்கள் தேகத்தையுங் கண்ணையுங்காணும். ஆன்மா தேகத்தையும், கண்ணையும், கரணங்களையும் காணும். சிவம் தேகத்தையும், கண்ணையும், கரணங்களையும், ஆன்மாவையுங்காணும். இனி ஆன்மா சிவத்தைக் காணாது. கரணங்கள் ஆன்மாவையும், சிவத்தையுங்காணா. கண்ணானது கரணங்களையும், ஆன்மாவையும், சிவத்தையுங் காணாது. தேகமானது கண்ணையும், கரணங்களையும், ஆன்மாவையும், சிவத்தையுங்காணாது. இவ்வுண்மையை நீர் தெளிந்திடின், கடவுளிருந்தால் ஏன் கண்ணுக்குப் புலப்படவில்லை என்று கடாவுதல் செய்யீர்.

உ. ஐயா, நீர் தெரிவித்த விதம் என் மனசுக்கு நன்றாய் விளங்கியது. தேகத்துக்குக் காணப்படாமையால் கண் இல்பொருளாகாது. கண்ணுக்குக் காணப்படாமையால் கரணங்கள் இல்பொருளாகா. கரணங்களுக்குக் காணப்படாமையால் ஆன்மா இல்பொருளாகாது. ஆன்மாவுக்குக் காணப்படாமையால் சிவம் இல்பொருளாகாது. கரணங்கள் ஆன்மா என்பவைகளுக்கே சிவம் காணப்படாத பொருளாயின், அது கண்ணுக்குப் புலப்படாதது அதிசயமோ? அது கண்ணுக்குப் புலப்படாமையால், அதனை இல்பொருளாக வாதித்த என்னை மன்னித்தருளல்வேண்டும்.

சை. நீர் நல்ல புத்திசாலி. வீண்வாதம் பண்ணாமல் விவேகவாதம் புரிவது எமக்குப் பரமசந்தோஷம். உமக்குத் தோன்றியவைகளை இன்னுங்கேட்கலாம்.

உ. கடவுளென்றொரு பொருளிருப்பதாக யாமொப்புவதில் எமக்குண்டாகிய லாபம் யாது?

சை. கண்ணானது காணுகின்றது என்று ஒப்பிய நீர், அத்தோடு கரணங்கள் கலவாதபோது அக்கண்ணுக்குக் காணுந் தன்மையுண்டா சொல்லும் பார்ப்போம்.

உ. கண்ணோடு கலந்திருந்த கரணங்கள் அக்கண்ணைவிட்டு நீங்கிச் சிறிதுபோது செவியோடு கலந்திருக்குமாயின், அப்போது கண்ணுக்கு விழிப்பிருந்தும், அது ஒன்றினையுங் காணாது. மரணமூர்ச்சைகளில் கண்விழித்திருந்தும் அதற்கு ஒரு காட்சியுமில்லை.

சை. கண்ணுக்குக் கரணங்களாலுண்டாகிய லாபம் நீர் தெரிந்துகொண்டமையால், உம்மை இனித் தெளிவிப்பது சுலபந்தான்.

உ. ஆயின், கரணங்களுக்கு ஆன்மாவாலுண்டாகிய லாபம் யாது? அதனைத் தெரிவித்திடல் வேண்டும்.

சை. மனம் - புத்தி - சித்தம் - அகங்காரம் என்னும் கரணங்கள் ஒன்றையொன்று அறியமாட்டா. ஒன்று தொழில் செய்யும்போது மற்றொன்று தொழில் செய்யாது. ஒன்றுக்குள்ள தொழில் மற்றொன்றினுக்கில்லை. இவற்றின் வேறாயதோர் பொருளினுதவி வேண்டாமலிவை தாமேயியங்குவனவாயின், எல்லாம் ஏககாலத்தில் தொழில்புரியும். அன்றியும், ஏககாலத்திலேயே எல்லாத்தொழிலுஞ் சீவியாநிற்கும். அங்ஙனமின்மையின், ஆன்மாவென்பதொரு பொருள் இவற்றையியக்குந் தலைமை வகித்ததென்றுணர்ந்து இன்புறுவீராக.

உ. எமது உலகாயதமதத்தில் ஆன்மாவென்பதொரு பொருளுடம்பாடில்லை. அப்படியெண்ணியிருந்த மருள் உமது சல்லாபங்கிடைத்தபோதே தொலைந்தது. ஆயினும், அதனை என்மனதில் நன்கு பதியுமாறு செய்திடல்வேண்டும்.

சை. தேகத்தைப் பிணமாக்கிவிட்டு, அத்தேகத்தினின்று நீங்கும் பொருளே ஆன்மா.

உ. தேகத்தைவிட்டு நீங்கிய ஆன்மா எங்கேபோகும்?

சை. வேறொரு தேகத்தையெடுக்கும்.

உ. இப்படியெடுத்துக்கொண்டேபோனால் முடிவு எப்படி?

சை. சிவன்றிருவடியை யடைந்தால் பிறவியொழியும். "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் - பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக் - கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய் - வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச் - செல்லாஅநின்றவித் தாவரசங்கமத்து - ளெல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான் - மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்" என்றார் சைவத்தலைவரும்.

உ. இவ்வாறு பிறந்துகொண்டே வருவது எதனால்?

சை. வினைகாரணம்.

உ. வினை ஆன்மாவினிடத்தில் எப்போதுண்டாகியது?

சை. நெல்லினிடத்து முளை-தவிடு-உமிகள் அநாதியாயிருந்திடுதல் போல ஆன்மாவினிடத்து முறையே கன்மமலம்-ஆணவமலம்-மாயாமலம் என்னு மூன்று மலங்களும் அநாதியாம். ஈண்டுக் கன்மம் என்றதே வினையாம்.

உ. இந்த மலத்திரயங்களை விசாரித்துக்கொண்டிருந்தால், முன்னே எடுத்த விஷயம் தடைபடுகின்றது. இது இருக்கட்டும். ஆன்மாவி னிருப்பைமாத்திரம் இப்போது ருசுப்படுத்தவேண்டியது.

சை. ஆன்மா அறிவுடையது. தேகம் அறிவில்லாதது. அறிவுடைய ஆன்மா தேகத்திலிருந்தபோது அத்தேகமும் ஆன்மாவும் பிரிக்கபடாமல் தேகமே அறிவென்று சொல்லும்படி விளங்கியது. தேகத்தைவிட்டு ஆன்மா நீங்கியபோது அத்தேகம் பிணமாகியது. *அப்போது அதனது சுபாவமாகிய ஜடத்வம் வெளியாகியது. அதனால், ஒன்றிலொன்று வேறுபட்ட தன்மைகளையுடைய இரண்டு பொருள்களை ஒரே பொருளென்றிடல்கூடாது.

உ. தேகம்-கண்-கரணம்-ஆன்மா என்பவைகளில் ஆன்மாவை மாத்திரம் தேகத்துக்கு வேறாயதோர் பொருளென்றதென்னை? கண்ணையும், கரணங்களையும் எவ்வாறு கொள்வது?

சை. கண்ணைத் தேகத்துக்கு வேறானதென்று யாருஞ்சொல்லார்கள். தேகத்துக்கில்லாதவொளி கண்ணுக்கிருந்தாலும் அது சூரியனொளிபோன்ற ஜடவொளியேயாம். இந்தக்கண் புறக்கரணம் என்று சொல்லப்படும். இதுபோன்ற ஞானகரணங்கள் இதனோடு சேர்த்து ஐந்து என்று சொல்லுவார்கள் மேலோர். இவைகளே ஞானேந்திரியங்களாம். இப்படியே கிரியா கரணங்கள் ஐந்தாம். இவைகளே கர்மேந்திரியங்களாம். இந்தப் புறக்கரணங்கள் பத்தும் தேகத்துக்கு வேறாயினவல்ல. இப்படியே அந்தக்கரணங்கள் நான்கும் அத்தேகத்துக்கு வேறாயினவாகா. இவ்வந்தக்கரணங்கள் புறக்கரணங்களை நோக்க வொளியுடையனவாயினும், இவற்றினொளியும் ஜடவொளியேயாம். ஜடவொளியோடுகூடிய பாஹ்யாந்தக்கரணங்கள் யாவும் தேகத்துக்கு வேறாயினவல்லவென்பதே நிச்சயம்.

உ. இடையிலொன்று கேட்கிறேன், ஞானேந்திரியங்கள் யாவை? கன்மேந்திரியங்கள் யாவை?

சை. மெய் - வாய் - கண் - மூக்கு - செவி என்பன ஞானேந்திரியங்களும், வாக்கு - பாதம் - பாணி - பாயுரு - உபஸ்தம் என்பன கன்மேந்திரியங்களுமாம்.

உ. இந்தப் புறக்காரணங்கள் பத்தும், உட்கரணங்கள் நான்கும் தேகத்தைவிட்டு என்றும் ஒழிந்திடாவோ ?

சை. இவை ஒன்றிலொன்று விஜாதியல்லவென்பது மாத்திரமேயன்றி, ஒழியும் ஒழியாவென்பதி லோர்பயனுமின்று. ஒரு மரப்பாவையினது தலையுடைந்ததாகக் கொள்வோம். அதனது கைமுறிந்ததாகக் காண்போம். அல்லது அதற்கு ஒருகேடுமுண்டாகாம லிருக்கட்டும். இப்படியே உட்கரண புறக்கரணங்களுங் கொள்ளத்தக்கனவாம். ஆன்மா இவ்வாறு கொள்ளத்தக்கதன்று.

உ. அதனை எவ்வாறுதான் கொள்வது ?

சை. ஒரு இரதத்தின்பேரில் ஒரு புருஷன் ஏறியிருந்தான். அந்த ரதத்தின் அச்சுமுறிந்தது. அப்போது அதிலேறியிருந்த புருஷன் கீழே குதித்து வேறொரு இரதத்தி லேறிக்கொண்டான். இரதத்தினது அவயவம் கேடெய்தியதனால் இரதிகனாகிய மஹாபுருஷன் கேடெய்திலன். அவன் அவ் விரதத்தினது அவயவமாகமாட்டான். இவ்வுபமானமே தேகம்-ஆன்மா என்பவைகளாகிய உபமேயத்தை நிறுத்துமென்றறியக்கடவீர்.

உ. பிருதிவி - அப்பு - தேயு - வாயு என்னும் பூதங்கள் ஒன்று கூடியபோது தேகம் உண்டாகிறதெனவும், அத்தேகத்தில் (பாக்கு - வெற்றிலை - சுண்ணம் இம்மூன்றுங் கூடியபோது செந்நிறமுண்டாவதுபோல) அறிவு உண்டாகிறதெனவும், ஆகையால் அறிவு என்பது தேகத்தின் குணமேயன்றி அதற்கு வேறாயதோர் பொருளாகாதெனவும் யாம் கூறுகிறோம். இதற்கென்ன சொல்லுகிறீர்?

சை. நீர்கூறிய பிருதிவிமுதலிய பொருள்களின் காரியம் தேகம் என்பது எமக்கும் ஒப்பே. அத்தேகத்தில் பிருதிவியின் குணம் - அப்புவின் குணம் - தேயுவின் குணம் - வாயுவின் குணம்

ஆகிய நான்கு மிருக்கக்கண்டோம். அவை கடினம்-சீதளம்-வெம்மை - சலநம் என்னும் ஜடகுணங்கள். இவைகளுக்கு அறிவு இல்லை. இவைகளுக்கு விஜாதியாகிய அறிவு அத்தேகத்திலிருக்கக்கண்டோம். இவ்வறிவு தேகத்தின் குணமாவதெங்ஙனம்?

தேகம் பாலியமாயிருக்கிறபோது அறிவு குறைந்திருக்கிறது. அது வளரவளர அறிவும் வளர்ந்துவருகிறது. தேகம் தளர்கிறபோது அறிவுந் தளர்கிறது. இதனால் அறிவு தேகத்தின் குணமாதலி லிழுக்கென்னை?

ஒரு நெருப்புக்குச்சியைக் கீழேதேய்த்தால், கொஞ்சம்நெருப்புண்டாகிறது. அதன்மேல் கொஞ்சம் விறகை யொடித்து வைத்தால், அவ்வளவு நெருப்பு அதிகரிக்கின்றது. கொஞ்சங் கொஞ்சமாக மலையளவு விறகு போட்டால், அவ்வளவுக்கு நெருப்பு ஓங்குகிறது. அது தணிந்துவரவர நெருப்புக்குறைகின்றது. இதனால், விறகினது குணம் நெருப்பு என்றிடல் தகுமோ? "அங்கியானது தானுமொன்றை யணைந்துநின்று நிகழ்ந்திடும் - பங்கியாதுயிர் தானுமிப்படி பற்றியல்லது நின்றிடாது" என்று கூறினர் பெரியோராகலின், அக்கினியானது காஷ்டமுதலியவைகளைப்பற்றி வர்த்தித்தல்போல ஆன்மாவானது தேகேந்திரிய பிராணந்தக்கரணங்களைப்பற்றி வர்த்திக்கு மியல்புடையதென்பதே சித்தம். அக்கினி விறகின்குணமாகாதவாறுபோல அறிவு அல்லது ஆன்மா தேகத்தின்குணமாயினதில்லை யென்று துணிவதே மேலோர் சம்மதம்.

தேகாதிகளுக்கு வேறாக ஆன்மா விருப்பதையுணர்ந்தேன். அது கரணங்கள்போல ஜடமாகாமையையுந் தெளிந்தேன். அன்றியும் அது அறிவுவடிவமாயிருப்பதையும் அறிந்தேன். இங்ஙனமாக, இதற்குமேலொரு கடவுளிருப்பதாக ஏனை கொள்ளவேண்டும்?

நீர் இப்போது கேட்டது எமக்கு ஸந்தோஷந்தான். ஆன்மாவுக்குமேலொரு பரமில்லையென்பது மாயாவாதிகள் மதம். நீரோ பிருதிவிமுதலிய பூதங்களே தெய்வமென்று வாதிப்பவர். இந்தப் பூதங்களின் காரியம் தேகம். அத்தேகத்தில் அங்கமாயுள்ளவை கண்முதலியன. அதனால் உம்மைத் தேகான்மவாதி யென்றும், இந்திரிய சமுதாயவாதி யென்றுங்

கூறுவர் பெரியோர். நீர் குணப்படுமாறு யாம் அதிக சிரம மெடுத்துக்கொண்டு அந்தக்கரண புறக்கரணங்களி னளவை களையெல்லா மெடுத்திசைத்தோம். இந்தக் கரணவியஷ்டி களிலொவ்வொன்றினைப் பரம் என்று மயங்கி வாதிப்பவர்க ளே புத்தர் சமணர் முதலினோர். தேகாத்மவாதியாகிய நீரும், கரணவாதிகளாகிய அவர்களும் அறிவில்லாத ஜடங்களி னிடத்திற் பரத்வபுத்தி வைத்தமையால், உங்களைப் பாச ஞானிகளென்று யாமொதுக்கினோம். உங்களோடுதானே பிரா ணன்முதலிய தசவித வாயுக்களைப் பரமென்று மயங்கிய கர்ம யோகிகளையுங் கழித்தோம். இத்தேகேந்திரியப் பிராணந்தக் கரண வழிபாடுகளையொருவி ஆன்மாவினுண்மை யுணர்ந்த வர்கள் பசுஞானிகளென்று சொல்லப்படுவர். இவர்கள் ஆன் மாவே பரம், அதற்குமேலொரு பரமில்லை யென்று வாதிப் பார்கள். இந்தக்கொள்கை உமது உலகாயதமதத்திற் கிணங் கியதன்று. நீர் எமது போதத்தைக்கேட்டுப் படிப்படியாய் இந்த நிலையில்வந்து நின்றீர். மாயாவாதிகளோடு யாம் வார் த்தைசொல்லுகிறபோது நீர் சமீபத்திலிருந்து கேட்பீராயின், சுலபத்தில் உமக்கு நியாயந் தேறிப்போகும். நீரோ அந்த மதத்தின் சொரூபமறியாதவர். உமக்கு அதனைப் போதித் துத் தெளிவிப்பது எமக்கு அதிக பிரயாசம். ஆயினும், யாம் எமது பிரயாசத்தைப்பாரோம். தேகவாதம் - இந்திரியவா தம் - பிராணவாதம் - கரணவாதமுதலிய பரமநாஸ்திகங்களை யெல்லாங்கடந்து சேதன புத்தியுண்டாகிய உமக்குச் சிவஞா னச்செல்வ மோங்குமாறு இனி உண்மையைப் போதிக்கின் றோங் கேளும்.

(இன்னும் வரும்.)

சிவமஹாபுராணம்.

சிவலிங்கபூஜாபலன்.

நைமிசாரணிய வாசிகளான சௌனகாதி முனிவர்கள் ஸூத முனிவரை நமஸ்கரித்து, ஸ்வாமீ! சிவபெருமானுடைய கிரியா யோகத்தை ஸநத்குமாரமுனிவர் வியாசபகவானுக் குபதேசித்த வகையே தேவரீர் அடியேங்கட் குரைத்தருளவேண்டும். அதனைக் கேட்கப் பேரவாவுடையவர்களா யிருக்கிறோம் எனக் கேட்க, ஸூத முனிவர் சொல்லத் தொடங்கினர். விலக்கற்கரிய சமுசார

துக்கத்தினின்றும் விலகிய மகாமுநிவர்களே! சிவபெருமானுடைய கிரியாயோகத்தை வியாஸபகவானுக்கு ஸநத்குமார முநிவர் கூறியருளிய வகையே சங்கிரகமாகச் சொல்லுகின்றேன்; கேட்பீர்களாக. ஒருகாலத்தில் வியாஸமுநிவர் ஸநத்குமாரரை யடைந்து அவரது இருசரணாரவிந்தங்களையும் பணிந்து, ஸ்வாமீ! சிவபெருமானது கிரியா யோகத்தையும் அதனால் வரும் பலனையும் தேவதா * ந்யாசத்தையும் மானஸிக பூசையையும் பாஹ்யபூசையையும் இவ்வகையெனத் தேவரீர் திருவாய்மலர்ந்தருளவேண்டும். அன்றியும் பிரமசரிய மனத்தாலும் புண்யகரமான வாக்குக் காயங்களாலும் கிரியாயோகத்தைப் பெரியோர் அநுஷ்டித்த முறைப்படி அநுஷ்டித்தவன் எவ்வகைப் பலனையடைந்து எவ்வகையாகச் சிவபதமடைவான்? சிவரூபமாகிய இலிங்கத்தை விதிப்படி அபிஷேகித்தருச்சித்தவன் பெறும் பலனும் யாது? எவ்வெம்மலர்கள் சிவபெருமானுக்குப் பூஜாயோக்கியமும், எவ்வெம் மலர்கள் அயோக்கியமுமானவை? எவ்வெத்தூபங்கள் சிவார்ப்பணஞ் செய்யத்தக்கவை? எவ்வெவை விலக்கத்தக்கவை? எவ்வெக்கனிகள் சிவபெருமானுக்கு நிவேதிக்கத்தகும்? எவ்வெவை நீக்கத்தகும்? எவ்வெவ் வாத்தியங்கள் சிவசந்நிதியில் வாசிக்கத்தக்கவை? எவ்வெவை நீக்கத்தக்கவை? நெய் பால் முதலியவற்றால் சிவபெருமானை அபிஷேகித்தவன் யாது பலனை யடைவான்? சந்தனம் கஸ்தூரி முதலியவற்றைச் சிவபெருமானுக்கு உபலேபனை செய்தவன் பெறும் பயன் யாது? இன்னுமுள்ள மற்றைய சிவபணிவிடைகளின் பலன்கள் யாவை? இவற்றையும் அடியேனுக்குச் சொல்லியருளவேண்டும் எனக்கேட்க, ஸநத்குமாரமுநிவர் சாற்றலாயினர்.

ஸத்யவதியின் புதல்வனே! வியாஸமுநிவனே! நீ யென்னைக் கேட்ட சிவபூஜாவிஷயங்களை யெல்லாந் தெளிவாகச் சொல்லுகின்றேன். முழுமனத்துடன் கேட்பாயாக: பரமாத்மாவாகிய பரசிவனிடத்திற் சித்தத்தைச் செலுத்திநிற்பதே ஞானயோகம்: பரசிவத்தின் பாஹ்யமாகிய அர்ச்சாரூபத்தில் எப்பொழுதும் பூஜைமுதலிய உபசாரங்களைச்செய்வது கிரியாயோகம். இதுவே சிவபெருமானைத் தியானிப்பதற்கு முக்கியமான சாதனம். இஷ்டகாமியங்களைக் கருதிச் சிவாலய நிர்மாணமுதலிய சிவபுண்ணியங்களைச் செய்தவர்கள் பெறும்பலனைச் சொல்லுகின்றேன். சிவபெருமானுக்குக் கருங்

---

* ந்யாசம் - இருக்கச்செய்தல்.

கல்லாலாவது மரத்தாலாவது பொன் வெள்ளி முதலிய லோகங்களாலாவது மண்ணாலாவது திருக்கோயில் கட்டுவித்தவன் நாடோறும் சிவயோகத்தால் அச்சர்வேசுவரனைப் பூஜிக்கின்றவன் பெறும் பலனையடைந்து, தன்குலத்தி லிறந்த பிதுர்க்களை நூறுதலைமுறை வரையிலும் என்றும் ஆனந்தமயமாகிய சிவலோகத்திற் செலுத்துவான். சிவாலயம் ஒன்று பெரிதாகவேனும் சிறிதாகவேனும் நிர்மாணஞ்செய்யவேண்டுமென்று ஒருவன் தன் மனத்தில் நினைத்தவுடனே, தான் ஏழு ஜனனங்களிற் செய்த பாபங்களினின்றும் புனிதமாவான். சர்வகர்த்தாவாகவுள்ள சிவபெருமானுக்கு ஆலயங் கட்டுவித்து அதிற் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்வித்தவன் சமஸ்தமான லௌகிக போகங்களையு மனுபவிப்பான். புண்ணிய ஸ்தலங்களில் சிவாலயப் பிரதிஷ்டை செய்வித்தவன் சமஸ்தலோகங்களிலுஞ் சிறந்த முத்திலோகத்தை யடைவான். கருங்கல்லாற் சிவாலயஞ் செய்வித்தவன் அக்கற்கள் ஒவ்வொன்றினுக்கும் ஒவ்வோராயிரவருஷஞ் சிவலோகத்தில் வசிப்பான். சிவபெருமானது அர்ச்சாரூபங்களாகிய இலிங்கமூர்த்தத்தைச் செய்வித்தவன் ஒருகாலத்தும் அழிவில்லாத சிவலோகத்தையடைந்து அறுபதினாயிரவருஷம் பலவித சுகங்களையு மநுபவித்து அப்படியே ஒவ்வோர் பதவியினும் அறுபதினாயிரவருஷம் வசித்திருப்பான். புண்ணியகரமான சிவலிங்கப் பிரதிஷ்டைமாத்திரம் செய்த பக்ஷத்தில் இறந்த பின்னரும் இறவாதவனாகவேயிருந்து, தன் வமிசத்தி லிறந்தவர்களையும் இனிப் பிறப்பவர்களையும் கற்பாந்தகாலவரையிற் புனிதர்களாகச் செய்யவல்லவனாவான். சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யவேண்டுமென்றுமனத்தில் நினைத்தவன் தன்பிதுரர்களை யெட்டுத் தலைமுறை வரையிலுந் தன்னோடு சிவசாயுச்சியம்பெறச் செய்வான். சிவலிங்கப் பிரதிஷ்டை செய்தவனைக் கண்டு நாமும் இவ்வாறு சிவலிங்கப் பிரதிஷ்டை செய்தாற் சற்கதியடையலாமென்று நினைத்தவன் அப்பொழுதே பரமபுண்ணியனாகித் தான் முன்செய்த பாவங்களையெல்லா மொழித்து முத்திக்கு அருகனாவான்.

முனிவர்களே! பூர்வத்தில் பிரமதேவர் இயமனுக்கு அதிபத்தியமும் பாசமுந் தண்டமும் கிங்கிரர்களோடு கொடுத்து, நீ உலகத்திற் சஞ்சரித்து தர்மாதர்மங்களை விசாரணை செய்யவேண்டுமென்று கட்டளையிட்டுச் சொல்லத்தொடங்கினர். பிறதேவர்களைப் பணியாது தேவதேவனாகிய சிவபகவானையே பரம்பொருளென்றுணர்ந்து அப்

பெருமானையே சரணுகதியென்று உறுதிகொண்டிருக்குஞ் சிவபக்தர்களையும், உலகத்தில் மாகேசுவரனை மனதிற் றியானஞ்செய்து கொண்டிருப்பவர்களையும், நித்திரைசெய்கையிலும், நடக்கையிலும், இருக்கையிலும், இரவும் பகலும் யாதுசெய்கையிலும் சிவத்தியானமகலாது, சிவா ! மஹாதேவா ! சந்திரசேகரா ! நீலகண்டா ! சங்கரா ! மஹேஸ்வரா ! ஜகத்பதி ! சச்சிதானந்தஸ்வரூபா ! என்று பஜனை செய்பவர்களையும், சிவபெருமானை நித்திய நைமித்திக பூஜைகளால் சந்தோஷிக்கச் செய்பவர்களையும், சிவபெருமானைப் புஷ்ப தூப தீப முதலியவற்றால் ஆராதிப்பவர்களையும், சிவாலயத்தை ஜீரணோத்தாரணஞ் செய்பவர்களையும், சிவாலயத்தைக் காலைமாலையில் திருவலகிட்டுச் சுத்தஞ்செய்பவர்களையும் அவர்கள் முன்னோரது மூன்று தலைமுறைகளையும், சிவாலயத்தைக் கட்டுவிப்போர்களையும் அவர்கள் வமிசத்திற் பிறக்கும் நூறுதலைமுறைகளையும், சிவலிங்கப் பிரதிஷ்டை செய்வித்தவர்களையும் அவர்கள் வரன்முறையில் பிறக்கும் அயுதபுருஷர்களையும், நீங்கள் அடையப்படாது. அவர்கள் சிவகணங்கட்குச் சமானமானவர்கள். அவர்களை நீங்கள் தண்டிக்க முடியாது என்று பிரமதேவன் கூற, இயமன் அதற்கிணங்கித் தன் சேவகர்களாகிய கிங்கரர்களுக்கு நாடோறும் இவ்விஷயங்களைச் சொல்லி ஞாபகப் படுத்திக்கொண்டிருந்தனன். *

சிவலிங்கப் பிரதிஷ்டை செய்வித்து முறைப்படி பூஜைசெய்தவன் தன் மனத்தில் விரும்பிய கோரிக்கைகளையெல்லாம் சந்தேகமின்றி சித்திக்கப்பெறுவான். தேவர்களா லருச்சித்தற்குரிய அர்ச்சாரூபமான சிவலிங்கத்தை, தேன் பால் நெய் தயிர் முதலியவற்றால் அபிஷேகித்தவன் ஆயிரம் பசுக்களை அருமறையாளர்க்குத் தானமளித்தவன் பெறும் பலனையும், வேதபூர்ணர்களான வேதியருக்குப் பசுநெய்யைத் தானமளித்தவன் பெறும் பலனையும் பெறுவான். ஆடகப் பிரமாணமான நெய்யினால் அநாதியாகவுள்ள சிவலிங்கத்திற்கு அபிஷேகித்தவன் சத்த சமுத்திரங்களாற் சூழ்ந்த

---

* நற்கீரதேவநாயனுர் அருளிச்செய்த கைலைபாதி காளத்திபாதியந்தாதி.

தொழுது நமனுந்தன் றூதுவர்க்குச் சொல்லும்
வழுவில்சீர்க் காளத்தி மன்னன்—பழுதிலாப்
பத்தர்களைக் கண்டாற் பணிந்தகலப் போமின்க
ளெத்தனையுஞ் சேய்த்தாக வென்று. (ப - ர்.)

உலக முழுவதையுந் தானஞ்செய்தவன் பெறும் பலனையடைவான். கிருஷ்ண சதுர்த்தசியில் சிவலிங்கத்திற்கு நெய்யினால் அபிஷேகித்தவன் தான்செய்த பாபங்களினின்றும் விலகுவான். பூரணை அமாவாசைகளில் அர்ச்சாரூபமான சிவலிங்கத்தைப் பிரயத்தனபூர்வமாகப் பூசித்தவன் சர்வபாபங்களினின்றும் நீக்கப்படுவான். ஞானத்தாலாவது, அஞ்ஞானத்தாலாவது ஒருவன் செய்த பாபங்களை சிவபெருமானுக்குப் பிரதோஷகாலத்தில் நெய்யபிஷேகஞ்செய்த தக்ஷணமே அவனைவிட் டகன்றுபோம். தேவர்களிற் சிறந்தவன் சிவபெருமான், * ஹவ்யங்களிற் சிறந்தது நெய். இச்சர்வேசுவர கிருதசம்பந்தம் [சர்வேசுரனை நெய்யினாலபிடேகித்தல்] பாபங்களை வேரோடறுக்கத்தக்கது. சிவபெருமானுக்குப் பசுவின்பாலால் விசேஷமாக அபிஷேகித்தவர்கள் இவ்வுலகத்தை நீங்குகையில் பாலே ஜலமாகப் பெருக்கெடுக்கும் நதியையும், பாலின் சம்பந்தமான சேற்றையுமுடைய வழியாகச் சிவலோகத்தையடைந்து சந்தோஷமும் சுகமும் ஸ்வஸ்தசித்தமும் ரோகமின்மையும் நல்ல உருவமும்பெற்று வாழ்ந்திருப்பார்கள். தயிர் முதலிய பொருள்கள் யாவும் பாலினாலுண்டாகுமாறு, பெரும்போகங்களெல்லாம் சிவார்ப்பணமாக அபிடேகித்த பாலினாலேயே யுண்டாகும். தேகபுஷ்டியை யுண்டுசெய்யும் பாலினால் சிவலிங்கத்திற்கு அபிடேகித்தவன் திவ்வியமான ஞானவிருத்தியடைவான். சிவபெருமான் க்ஷீராபிஷேகத்தாற் களிகூர்ந்தருளுமாறு அபிஷேகித்தவனுக்கு நவக்கிரகங்களின் அநுகூலமும் புஷ்டியும் யாவரிடத்திலுங் கிருபையுமுண்டாகும். நெய்யும் பாலும் சிவபெருமானுக்கு அபிடேகித்தவுடன் சிவபெருமான் பிரசன்னமாவார். சிவபெருமானை யெப்பொழுதும் நெய்யினாலும் பாலினாலும் அபிஷேகித்தவனுக்கு உலகில் யாவும் நன்மையாகவே யிருக்கும். இதற்குத் திருஷ்டாந்தமாக ஓர் பூர்வசரிதஞ் சொல்லுகின்றேன்.

பூர்வத்தில் பூஷணன் என்பவனும் அவனது அதிரூபவதியான சுமதி என்னும் யௌவனமுடைய மனைவியும் சுவர்க்கலோகத்தையடைந்து பலவிதமாகக் கிரீடித்துச் சுகமநுபவித்துக் கொண்டிருக்கையில், கௌதமியென்பாள் கண்டு ஆச்சரியமுற்றுச் சுமதியை நோக்கி, சுமதீ! இச் சொர்க்கலோகத்தில் இந்திராதிதேவர்கள் எண்ணிறந்தவர்களிருக்கின்றனர். அவர்களுக்கும், உனக்குள்ள

* ஹவ்யம் - தேவர்கட்காக ஹோமஞ்செய்யுந்திரவியம்.

காந்தியும் உன்னைப்போன்ற தேகமணமும் அதிக அழகும் அருவிலைப்பணிகளும், பட்டாடைகளும் கிடையா. இவையாவற்றிலும் இந்திராதி தேவர்களைக்காட்டிலும் நீங்களிருவரும் மேம்பட்டிருக்கிறீர்கள். உங்கள் மனவொற்றுமையும் அவர்களுக்கில்லை. நீ இவ்வகைய சிறப்பினையெல்லாம் ஒருங்கே யடைந்து கணவனுடன் விளையாடிக்கொண் டிருக்கின்றனையே. இஃதுனக்குத் தவத்தாற் கைகூடியதா? தானபலத்தாற் கிடைத்ததா? யாகாதிகிருத்தியங்களாற் சம்பவித்ததா? இதனை முழுதுஞ் சொல்லவேண்டும் எனக் கேட்க, சுமதியானவள் சந்தோஷித்துச் சொல்லலாயினள். என் பர்த்தாவின் மூதாதைகள் யாவரும் குல பூர்வமாகச் சிவபெருமானை யாராதித்து வந்து கடைசியில் என் கணவன் அந்தச் சாம்பவமூர்த்தியைக்குறித்து அநேக யாகங்களைச்செய்ய, அந்தயாகத்தால், யாகபதியாகிய சங்கரபகவான் திருவுளங்களித்து அநுக்கிரகித்தமையின், சுவர்க்கப்பிராப்திக்குக் காரணமாயிற்று. அந்த யாகத்தில் தீர்த்தோதகஸ்நானமும் கிருதஸ்நானமும் கணக்கின்றிச் செய்வித்தமையின் எங்களிருவருக்கும் திவ்வியமான தேக காந்தியும், மனவொற்றுமையும், மிருதுத்தன்மையும், சுகமும், யாவருக்கும் விருப்பமும் உண்டாயின. இவை யாவும் நெய்யினு லபிடேகித்த பலத்தினுலேயே கிடைத்தன. அந்த யாகத்தில் மனோபீஷ்டமான விலையுயர்ந்த வஸ்திரங்களையும் நவரத்தினகசிதமான பூஷணங்களையும் சந்தனமுதலிய பரிமளவஸ்துக்களையும் அநேகவிதமான மலர்மாலைகளையும் சிவார்ப்பணமாக்கினேமாதலின் அச்சிவார்ப்பணஞ் செய்தவையாவும் இப்பொழுது எங்களுக்குச் சொர்க்கலோகத்தில் உண்டாயிருக்கின்றன. சிவபெருமானை நானாவித நிவேதனங்களால் திருப்தி செய்வித்தோமாதலின் நாங்கள் இவ்விடத்தில் எப்பொழுதும் திருப்தியாகவே யிருக்கிறோம். சுவர்க்க காமியாகிய என்கணவர் சிவார்ச்சனைசெய்கையில் யானும் அவருடனிருந்து அருச்சித்தமையின் எனக்கு அற்புதமான புஷ்டியுண்டாயிருக்கிறது. மனவாக்கு காயங்களால் எவ்வெக் கோரிக்கையோடு ஒருவன் சிவபெருமானது அர்ச்சாரூபமான இலிங்கத்தைப் பூசிப்பானோ அவன் அவ்வக் கோரிக்கையை விரும்பிய வகையே யடைவானென்பதிற் சிறிதுஞ் சந்தேகமில்லையென்று கௌதமியை நோக்கிச் சுமதி சொல்லினள். ஆனபடியால் ஒருவன் சிவபெருமானைப் பத்திபூர்வமாக அருச்சிப்பானுயின், அவன் தேவர்களுக்குந் துர்லபமான போகபாக்கியங்களை யநுபவிப்பான். சந்தனம் குங்குமப்பூ அகரு

பச்சைக்கர்ப்பூரம் முதலிய சுகந்த திரவியங்களால் சிவலிங்கத்தை * உபலேபனஞ்செய்தவன் அப்பொழுதே சுபகரமான வரங்களைப் பெறுவான். சிவபெருமானுக்குக் கருஞ்சந்தனமுங் கருந்தூபமும் விநியோகித்தவன் ரோகியாவான். நல்ல சுகந்தமுடைய வேதோக்தமான சாம்பிராணி முதலியவற்றினை நெய் கூட்டித் தூபங்கொடுத்தவன் தனக்குத் துஷ்டி புஷ்டிக ளுண்டாகப்பெறுவான்.

மனத்திற்கு ரம்மியமில்லாத மலர்மாலைகளைச் சிவபெருமானுக்குச் சாத்தப்படாது. மனோகரமான மலர்களாற் றொடுத்த மாலைகளையே தேவதேவனுக்குச் சாத்தலாம். சிவபெருமானுக்கு விருப்பத்தைத் தரத்தக்க மலர்கள் மிருதுவானதும் மணமுடையதுமான எல்லா மலர்களும், தாமரைமலரும், உலர்ந்திருப்பினும் வில்வபத்திரமும், நீலோற்பலமும், ஜாதிபுஷ்பமும், மல்லிகையும், பாடலமும், கரவீரமும், ஆத்தியும், கொன்றையும், கோங்கும், சதபத்திரமும், துளசியும், அகத்திப்பூவும், முல்லையும், இருவாக்ஷியும், பலாசமுமாகும். ஆதலின் இவ்வகை மலர்களாலேயே சிவபெருமானைப் பூஜிக்கவேண்டும். இவையேயன்றி மனத்திற்குங் கண்ணிற்கும் ரம்மியமான மலர்கள் யாவும் சிவாராதனைக்குத் தக்கவையாம். செவந்த மலர்களும் கறுத்தமலர்களும் சிவலிங்கரூபத்தில் பூஷணார்த்தமாகச் சமர்ப்பிக்கவேண்டும். சிவபெருமானைச் செந்நிறத்த மலர்களால் நாடோறும் பூஜிப்பவன் சித்தர் வித்தியாதரர் அப்சரசு கணங்கள் முதலானுருடன் அநேககாலம் வாழ்ந்திருந்து சந்தோஷமடைவான். முள்ளையுடையதும் உக்கிரகந்தமுடையதுமான ஊமத்தை முதலிய மலர்களாற் சிவலிங்கத்தை யருச்சித்தவன் சிவகணங்கட்குப் பிரீதிமானுவான். மலர்கள் கிடைக்காவிடின் ப்ருங்கராஜபத்ரம் [கரசராங்கணி], அறுகம்புல், சமீபத்திரம், தமாலம் முதலிய பத்திரங்களாற் பூஜைசெய்யலாம். இவ்வாறு நித்தமும், பரமகாரணனுன சிவபெருமானை இலிங்கமூர்த்தத்திற் பூஜிக்கிறவன் அப்சரசு கணங்களாற் பூஜிக்கப்பட்டுச் சிவலோகத்தில் வாழ்ந்திருப்பான். அவனுக்கொருகாலத்தில் உலகத்திலே ஜனனமுண்டாயினும் பேரரசனுய்ப் பெருஞ்செல்வத்துடன் ஏகசக்ராதிபதியாயிருந்து கிரமமாக மோக்ஷமுறுவான். தாழைமலர்களாற் சிவபிரானை யர்ச்சிக்கப்படாது. மருதோன்றிமலர்களாற் பூசித்தவன் மிலேச்சராசனுவான். சுகந்தமான மலர்களாலும் சுகந்த கர்ப்பூர சந்தனங்

* உபலேபனம் - பூசுதல்.

களாலும் பரிசுத்தமான ஜலத்தினாலும் சர்வேசுரனாகிய சிவபெருமானை யபிஷேகித்து, பட்டினாலாவது பருத்தியினாலாவது செய்யப்பட்டுள்ள வஸ்திரத்தைத்தரித்து மனோகரமான உருசியுள்ள விரும்பத்தக்க பக்ஷியங்களையும் சிரேஷ்டமான பலவித பழங்களையும் சுவர்ணபாத்திரத்தில் வைத்து நிவேதித்து, சுவர்ணம் நவரத்தினங்கள் முதலியவற்றையுஞ் சமர்ப்பிக்கவேண்டியது. பின்னர் மகா யோகியும் சதாசார ஸம்பந்நனுமான பிராமணனைச் சிவபெருமானாகவே பாவித்து "ஸர்வாயவ்யக்த ரூபாய நாம்நா தஸ்மை" என்று சொல்லிக்கொண்டு, சிவார்ப்பணஞ்செய்த பொருள்களிற் சிலவற்றை அவ்வேதியனுக்குக் கொடுக்கவேண்டும். சங்கிராந்தி-விஷுவத்புண்ணியகாலம் - வ்யதிபாதம் - தக்ஷிணாயன வுத்தராயணங்கள் - கிரஹணகாலம் - பூரணை - அமாவாசை - சதுர்த்தசி - அஷ்டமி முதலான புண்ணியகாலங்களிற் செய்யப்படும் பூஜை நைமித்திக பூஜையாதலின் அக்காலங்களிற் சிவலிங்கார்ச்சனை செய்தவர்கள் நித்திய பூஜை செய்வோரைக்காட்டிலும் ஆயிரம் பங்கு அதிகமான பலனை யடைவார்கள். இது சிவபெருமானாலேயே கூறப்பட்டவை. இவற்றை உள்ளபடியே உனக்குச் சொன்னேன் என்று ஸநத்குமார முனிவர் வியாஸபகவானுக்குக் கூறினரென்று ஸூதமுனிவர் நைமிசாரணிய வாசிகளுக்குரைத்தனர்.

அப்பதீக்ஷிதசுவாமிகள்

சரித்திரத்தின் ஓர் பகுதி.

[இது உபயவேதாந்த பிரவர்த்தகாசாரியரும் சிவகர்ம சித்தாந்த ஞான நிஷ்டருமாய் எழுந்தருளியிருந்த காட்டூர் ஸ்ரீ சுந்தரசிவாசாரிய சுவாமிகள் இயற்றிய சிவாதிக்கிய ரத்னாவளியிலிருந்து எடுத்து இங்கே வெளியிடப்பட்டது.]

காஞ்சிபுரத்திலே தாத்தாசாரி யென்னும் பாஞ்சராத்திரியொருத்தன் ஸ்ரீமத் அப்பதீக்ஷித ஸ்வாமிகள் விஷயத்தில் அசூயை யதிகரித்து அவரை யெந்தவிதத்தில் வெல்லுவதென்று ஆலோசித்து அவர்பாற்சென்று உம்முடைய சிவன் விடமுண்டருளியது சத்தியமாயின் யாங்கள் தரும் இவ்விடத்தை நீருமுண்டு சுகித்திரும் பார்ப்போமென்று கூறுதலும் அதற்குத் தீக்ஷிதசுவாமிகளிசைந்து அவனால் கொடுக்கப்பட்ட விஷங்கலந்த பாலையுண்டு

ஒருசற்றேனு மதனால் வருந்தாது "சிவதத்வவிவேகம்" என்னுங் கிரந்தமொன் றப்போதே யியற்றி சர்வ ஜனப்பிரசித்தியாய் அரசன் முதலியவர்க ளஞ்சும்படிப் பிரசங்கித்தனர். அதனை மறுத்துக் கூற வகையில்லாமல் பேய்போல் விழிக்குந் தாத்தாசாரியினுடைய தீயசெய்கையையும், விசாரலோபத்தையும் அறிந்த அரசன் சிவஞானச் செல்வராகிய தீக்ஷிதசுவாமிகளை யடைந்து ஆசாரிய மரியாதைகொண்டு, தன்னுடைய தவம் பலித்துக் கைவந்ததுபோலும் மகிழ்ந்து, பேரன்புடையவனாய் ஒழுகிவருவானாயினான். தாத்தாசாரி அதிகமாச்சரியங்கொண்டு அரசனிடத்திற் சென்று என்னுடைய சிஷ்யனாகிய நீ என் விரோதியை யபிமானிப்பது யுக்தமன்று எனக் கூறித் தீக்ஷிதரோடுவாதித்து அவர் செய்த கிரந்தங்களையெல்லாங் கண்டித்து வைஷ்ணவ ஜயஸ்தம்பம் நாட்டப்போகின்றேனாகையால் இப்பெரு விஷயத்தை நீ முன்னின்று முடிக்கவேண்டு மென்று கூறினான். அரசன் உள்ளம் புழுங்கித் தீக்ஷிதஸ்வாமிகள் விஷயத்தில் அவ்வாறு நடத்தத் தனக்கிசைவில்லையாயினும், தாத்தாசாரி தன்னுடைய ஆசாரியனென்னும் விசுவாசம் பாராட்டி அவனை மறுக்கக்கூடாதவனாய்த் தீக்ஷிதஸ்வாமிகளை யடைந்து வந்தனம்புரிந்து விஷயம் இன்னதென்று அறிவிக்கவும், சுவாமிகள் சந்தோஷித்து அரசனை நோக்கி இந்த வாதமுடிவில் தோல்வி வெற்றிகளை நிச்சயித்துக் கூறுதற்கு மத்தியஸ்தர் வேண்டுமாகையால் யாரையாவது சித்தப்படுத்துமென்று திருவுளம் பற்றினர். அரசன் வியாசபட்டர், பராசரபட்டர் என்னும் பேரையுடைய மத்துவாசாரியர்களையும், இன்னும் அனேக மதவாதிகளையும் வரவழைத்து அவர்களில் மத்துவாசாரியர்களாகிய இருவரையும் மத்தியஸ்தராக நியமித்து வாதாரம்பமாகி நடந்து வருகையில் தாத்தாச்சாரி பின்னிடைந்து கட்சிகள் சொல்ல வகையறியாமல் குவாதஞ்செய்யத் தொடங்கவும், மத்தியஸ்தராய் நின்றவர்களில் வியாசபட்டரென்பவர் எழுந்துநின்று தீக்ஷிதஸ்வாமிகளை நமஸ்கரித்துக்கொண்டு ஒரு சுலோகத்தைக்கூறிச் சைவாசாரியராகிய அப்பதீக்ஷிதஸ்வாமிகள் செய்துவரும் சைவப் பிரசாரத்தால் வைஷ்ணவமதம் பாழாகிவிட்டதென்றும், அது பாழாகிவிடவும், அம்மதசின்னங்களி லொன்றாகிய ஊர்த்துவபுண்டர ரேகைகளாகிய சிருங்கங்கள் பர்வத சிகரங்களையடைந்தனவென்றும், தப்தமுத்திரைகளாகிய சங்குசக்கர முத்திரைகள் எருதுகளுக்காய்விட்டனவென்றும், ஸ்ரீசூர்ணமென்கிற மஞ்சட்பொடி ஸ்ரீகளுடைய குசமண்டலத்திற் சேர்ந்துவிட்டதென்றும் எடுத்துப் பிரசங்கித்து அஞ்சலியத்தராய் நின்றனர். பராசரபட்டர் என்பவர் கொஞ்சம் வருந்தி மத்தியஸ்தமாகவந்த நம்மில் வியாசபட்டர் சைவராய்விட்டனரேயென்று சகிக்கமாட்டாமல் தாமெழுந்து தீக்ஷிதரோடு

அனேகவிதமாய் வாதிக்கத்தொடங்கி ஏழுநாள்பரியந்தம் வாதித்துந் தீக்ஷிதர் பின்வாங்காமல் வாதித்துவருந் தீரத்தையும், அத்தெய்வசபையில் விளங்கிவருமுண்மையையுங் கண்டு பரிபாக விசேஷத்தால் தீக்ஷிதர்பால் தமக்கும் பக்திஜனித்து அவரை நமஸ்கரித்துக்கொண்டு அபசாரக்ஷமை வேண்டிநிற்கையில், தீக்ஷிதரவர்கள் எழுந்துநின்று அனேகமதவாதிகள் நிறைந்திருக்கும் அச்சபையை நோக்கி இப்போது நாம் செய்துவரும் சைவப்பிரசாரத்தை மத்துவ ராமாநுஜாசாரிய மதஸ்தர்கள் மறுத்து எம்மால் கண்டிக்கப்பட்டார்களானபடியால் இச்சபையில் வேறு எந்தமதஸ்தர்களாவது எம்மை மறுக்கக்கூடுமாயின் அவ்வாறு செய்யலாமென்று திருவுளம்பற்றினார், வரநந்தியென்னும் பௌத்தனொருவனெழுந்து பிடகாகமவழித்தாய்ச் சில பொய்யுரைகளைப் பிதற்றி யுடனே கண்டிக்கப்படவும், மாயாவாதிகளாகிய சில ஸ்மார்த்தர்கள் அவரை யணுகித் தேவரீர் வைதிகதுல்யராயிருந்தும் அதனை யிங்கேவிளக்கி அத்வைத ஸ்தாபனஞ்செய்யாமல் வேதபாஹ்யமாகிய சிவாகம வழித்தாய்ச் சைவப்பிரசாரஞ் செய்துவருவது யுக்தமன்றென்று கூறியகாலத்தில் அவர்களை நோக்கி வேதசிவாகமங்க ளிரண்டும் பதியாகிய சிவபிரானருளிய உண்மைப்பிரமாணங்களாகவும், நீங்கள் சிவாகமங்களை நிந்தித்து வேதவிருத்தமான துராசாரம்பூண்டு தீயவொழுக்கத்தில் நிற்கும் பாஷண்டிகளாவீர்களென்று அவர்களைக் கண்டித்து "வைதிகாசார நிர்ணயம்" என்னுங் கிரந்தமொன்று அப்போதேயியற்றி வேதசிவாகம சம்மதமான தருமங்களைக்கூறிச் சித்தாந்தப் படுத்திவிட்டு, மேல் ஒருவரும் தம்மை யெதிர்த்து வாதிக்க விடமில்லாமல் எல்லா மதங்களையுங் கண்டித்து "பரமததிமிரபாநு" என்னுங் கிரந்தமொன் றியற்றிச் சைவத்தினுண்மையை அநேகவிதங்களால் எடுத்துக்கூறிப் பிரசங்கித்தனர். இவ்வற்புதங்களையெல்லாங் கண்டுகொண்டு நிற்பவராகிய பராசரபட்டர் தீக்ஷித ஸ்வாமிகளை வலம்வந்து அவரைநமஸ்கரித்துக்கொண்டு அரசன் முதலிய மஹாசனங்கள்கூடிய அப்பெருஞ் சபையைப்பார்த்து ஒருசுலோகத்தைக்கூறி மாத்துவமதமாகிய காடாந்தகாரந்தொலைய உதிக்கும் ஞானசூரியனென்றும், பௌத்த சித்தாந்தமாகிய மஹாரணியத்தைத் தகிக்கவரும ஜுவாலாக்கினி யென்றும், சிவாகமங்களை வேதவிருத்தமென்று கூறித்திரியும் பாஷண்டிகளாகிய சர்ப்பசமூகங்கள் நசிக்கவெழுந்த கருடபகவானென்றும், இராமாநுஜ மதமென்கிற பர்வதம் பொடிந்துபோகப் பேதித்துடைக்கும் வச்சிரா

யுதமென்றும், சைவாசாரம் என்கிற சமுத்திரத்தினின்றுந் தோன்றிய பூரணசந்திரனென்றும், மஹாவித்வசிரோமணியாகிய அப்ப தீக்ஷிதஸ்வாமிகள் (யாவராலும் புகழ்ந்துரைக்க) ஸர்வோத்கர்ஷராய்ப் பிரகாசிக்கின்றாரென்று தெளிவுபெறப் பிரசங்கித்து முடிவு கூறுதலும், இவ்வற்புதங்களை யெல்லாம் பிரத்தியக்ஷமாகக் கண்ட அரசன் அதிக சந்தோஷத்தை யடைந்தவனாய்த் தீக்ஷிதஸ்வாமிகளைப் பணிந்து என்னுடைய அபசாரத்தைப் பொறுத்தருளல் வேண்டுமென்று பிரார்த்தித்துத் தாத்தாசாரியை நோக்கி இனியிப்படிப்பட்ட சிவாபராத விஷயத்தில் என்னை யழைப்பது யுக்தமன்றென்று கூறிவிட்டுத், தீக்ஷிதஸ்வாமிகளிடத்தில் வியாசபட்டர் பராசரபட்டர் முதலியவர்களோடு தானும் சிவதீக்ஷை பெற்றுக்கொண்டு சைவப்பிரசாரஞ் செய்துவந்தனன், தாத்தாசாரி திகிலடைந்து இனியென்னசெய்வதென்றாலோசித்து ஒருநாள் தீக்ஷிதரவர்கள் நதிக்குச்சென்று நீராடி நித்தியாநுஷ்டான முடித்துக்கொண்டிருக்குஞ் சமயம்பார்த்துச் சிலதுஷ்டர்களை ஏவி இதுநல்ல சமயமாகையால் அவரைக் கொன்றுவிட்டு வாருங்கோள் என்று அனுப்புதலும் அவ்வாறேசென்ற பாதகர்கள் தீக்ஷிதரை யணுகிய காலத்தில் அனேகர் சூலபாணிகளாய்த்தோன்றி அவரைச்சூழ்ந்து நிற்கவும், வந்தவர்களெல்லாம் பயந்து தீக்ஷிதரைச் சரணடைந்து தமது தீயவெண்ணத்தை வெளிப்படுத்தலும், ஸ்வாமிகள் அவர்களை நோக்கிச் சிவனடியார்களுக்குத் தீங்கு நினைக்கும் அப்பாதகன் இப்பூமியிலிருப்பதைப் பார்க்கிலும் ஒழிந்துபோய்விடுவது அதிக நலமென்றுரைத்து ஒரு சுலோகத்தைக் கூறிச் சாம்பமூர்த்தியாகிய சிவபெருமானே சகலபுவனகர்த்தாவாயிருந்தால், சிவாகமங்களோடு சமஸ்தவேத புராணங்களும் உறுதிப்பிரமாணங்களானால், விபூதி யுருத்திராக்கங்கள் தெய்வீகமுடையதானால், என்னுடைய சத்துருவாகிய துன்மார்க்கனுக்கு அகாலமிருத்து சம்பவிக்குமாக என்று பிரமாணஞ்செய்து கூறுதலும் அவன் உடனே தலையிலேயிடிவிழுந்து செத்தான். இவை ஸ்ரீ சிவஞானசுவாமிகள் செய்தருளிய "தீக்ஷிதமான்மியம்" என்னுங் கிரந்தத்தால் இனிது விளங்கும். இந்த மூர்த்திகளைச் சிவாஷ்டம தநுவி லொன்றென்று மேலோர்கள் கூறுகின்றனர். இவரால் செய்யப்பட்ட கிரந்தங்கள் சிவகர்நாமிருதம், பிரம்ஹதர்க்கஸ்தவம், சிவார்க்கமணிதீபிகை, தப்தமுத்திரவித்ராவணம், பாகவததாத்பரிய சாரசங்கிரகம், பாரத தாத்பரிய சாரசங்கிரகம், இராமாயணதாத்பரிய சாரசங்கிரகம்,

சிவபுராண தாமசத்வநிராகரணம், சர்வார்த்த சாரசங்கிரகம், பரிபாஷாமஞ்சரி, ஹரதத்தமான்மியம், பாஷண்டமதசபேடிகை முதலியனவாம். இந்நூல்களில் சிலவற்றை ஸ்ரீ சிவஞானசுவாமிகள் மொழிபெயர்த்திருக்கின்றனர்.

ஸ்ரீ ஹரதத்தாசாரிய சுவாமிகள் சரித்திரத்தின் ஓர் பகுதி.

அரதத்தாசாரியருடைய மனைவியார் ஓர்நாள் அரிசி கழுவும்போதுநெருப்பணைந்தது கண்டு அதனை எரிக்கப்போயிருந்தார். அந்தவேளையில், நாயொன்று வந்து அந்த அரிசியைத் தின்றது. இதைக் கண்ட மனைவியார் அரிவாளை யெடுத்து யெறிந்துவிட, அதுபோய் நாய்மீது வீழ்ந்து, அதன் கழுத்தை வெட்டிவிட, நாய் மூர்ச்சையாய் வீழ்ந்தது. இது தெரியாது நேர்ந்ததே என்று பஞ்சாக்ஷரத்தைச் செபித்தார். அப்போது மாத்தியான்னிகஞ் செய்துவந்த அரதத்தாசாரியர் இது மூர்ச்சையாய்க் கிடத்தலைக் கண்டு, தமது மனைவியை இஃதென்னை என்றுகேட்க, அவர் நடந்த சமாச்சாரஞ் சொல்ல, அதனால்சிறிது வருத்த முற்று அவரைநோக்கி நீ வாயிலை அடைத்துவையாமையினால் இதுநேர்ந்தது, அதனால் இது உன்மேற் றோஷமேயன்றி இந்நாயின்மேற் குற்றமில்லையென்று கண்டித்துச்சொல்லி, அந்த நாயைத் தமது மடித்தலத்திலெடுத்து வைத்து, அதற்கு உருத்திராக்ஷம் தரித்து, விபூதியை அதன் சரீரமெங்கும் பூசி, பஞ்சாக்ஷரோபதேசஞ் செய்தார். அப்போது கோடிசூரியப்பிரகாசமுடைய இரதமொன்று கைலாசத்திலிருந்து வர, இதைக்கண்ட நாய் தனது பூதசரீரத்தை யொழித்து, தேவசரீரத்தை யெடுத்துக்கொண்டு கைலாசத்தை அடைந்தது. அதற்குச் சிவபெருமான் கணாதிபத்தியத்தைக் கொடுத்தார். அந்த நாய் கைலாசமடைந்தமை அறிந்து அரதத்தர் மிகவும் களிப்புடையராயினர்.

நமது கிருகத்திலே நமது தாயாரும் பாரியும் காளையை அடித்து வெருட்டித் தண்டத்தாற் புடைத்தும், நாயை அறிவாளால் வெட்டியும் துஷ்டகாரிய மிரண்டு செய்தார்களே. இவர்களை இப்பாபத்தினின்றும் விமோசனஞ் செய்தல் வேண்டுமென்று ஏகாந்தத்திலே யிருந்து சிந்தித்தார். அப்போது அவர் ஓர் பத்திரிகை

யைக் கையிலெடுத்து "தெரிந்துந் தெரியாதுஞ்செய்த மகாபாபங் களுக்கு." என்னும் கருத்தையுடைய

ஞாநாஞ்ஞாநப்ரயுக்தாநாம்பாபாநாம்மஹதாமபி;

இப்பாதிச் சுலோகத்தை எழுதிக் கிருகத்திலே வைத்துவிட்டு, மனுஷர்களுடைய பாபங்களை ஒழிப்பதும், மகா புண்ணியம் வாய்ந்ததும், இருஷீசுவரர்களாற் சேவிக்கப்பட்டதுமாகிய காவேரிக்கு ஸ்நானத்துக்குப் போயிருந்தார். அப்போது அக்கினீசுவரப் பெருமான் அரதத்தாச்சாரியர் வடிவு பூண்டு அவர் வீட்டுக்கு வந்து, அப்பத்திரத்தை அவர் மனைவியார் வாயிலாகப்பெற்று, "ஏகாந்தத்திலே யிருந்து சிவநாமத்தை உச்சரித்தலே பிராயச்சித்தமாம்" என்னுங் கருத்தையுடைய

ஏகாந்தநிஷ்க்ரதிச்சம்போஸ்ஸகிர்தேவஹிகீர்த்தநாத்;

இந்த மற்றைப் பாதிச்சுலோகத்தை எழுதி அப்பத்திரிகையை அவர் கையிலே கொடுத்துவிட்டு அந்தர்த்தானமாயினார். அரதத்தாச்சாரியர் ஸ்நானஞ்செய்துவந்து சிவாராதனம்பண்ணி, பஞ்சயஞ்ஞம் வைசுவதேவம் முதலிய செய்து அதிதி பிராமணர்களுக்குப் போசனங் கொடுத்து, தாமும் புத்திரர்களோடு போசனஞ்செய்து, ஆசனத்திருந்து பத்திரிகையை எடுத்துப்பார்த்தார். பார்த்தபோது உத்தரார்த்தம் எழுதப்பட்டிருப்பது கண்டு தமது பாரியை அழைத்து இப்பத்திரிகையை யார்கையி லெடுத்துக் கொடுத்தனை என்றார். அதற்கு அவர் ஸ்நானஞ்செய்யப்போந்த நீவிரே மீண்டுவந்து பத்திரிகையைக்கேட்டு எழுதித் தந்துவிட்டுப்போயினீர் என்றார். சிவநாமத்தின் மகிமையையறிந்த அரதத்தாசாரியர் நாம் இருதயத்திலே சிந்தித்தபிரகாரம் சங்கரரே இங்ஙனஞ் செய்தாரென்று கண்களிலே நின்று ஆனந்தபாஷ்பம் பொழியப் பரவசராயினார்.

ஸ்ரீமத். ம. தி. பாநுகவி சுவாமிகள்.

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் (1917ஆம்)

19-வது வருடாந்த மகாஜனக் கூட்டம்.

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் 19-வது வருடாந்த மகாஜனக்கூட்டம் நிகழும் 1918ஆம் மார்ச்மீ 30உ சனிவாரம் பிற்பகல், இதின் சபாமண்டபத்தில் கூடியது.

அச்சமயத்தில் இத்திருக்கூட்டத்தினர் உட்பட சுமார் 200 சிவநேயர்கள் வந்திருந்தார்கள்.

சிதம்பரம் திருவாவடுதுறை முதலிய திவ்விய தலங்களிலிருந்து வந்திருந்த் ஸ்ரீ நடராஜ ஓதுவாரவர்கள் முதலிய எண்மர் கூடிய ஓதுவார்மூர்த்திகளின் திருக்குழாத்தினர் இசைக்கருவிகளுடன் தமிழ்வேதபாராயணஞ் செய்தார்கள்.

சபைத்தலைவர் ஸ்ரீமான் சித்துரை இராஜாகண்ணு முதலியாரவர்கள், B. A., பிரேரேபிக்கவும், காரியதரிசி இ. ஆதிமூலமுதலியார் ஆமோதிக்கவும், மகாசபையார் கரகோஷஞ்செய்து அங்கீகரிக்கவும், இத்திருக்கூட்டத்தின் போஷகருள் ஒருவராகிய ஸ்ரீமான் எஸ். இரத்தினவேல்செட்டியாரவர்கள். (Dubash, Messrs. Best & Co.) அக்கிராசனம் வகித்தார்கள்.

உதவிகாரியதரிசி ஸ்ரீமான் பி. வி. சமரபுரிமுதலியாரவர்களால் இச்சபையின் 19-வது வருடத்துச் சபாக்கிரந்தம் வாசிக்கப்பெற்று மகாசபையினரியாவராலும் அங்கீகரிக்கப்பெற்றது.

இ. ஆதிமூலமுதலியார் இச்சபையின் விதிகளுள் 18 - வது இலக்கமுள்ள "நிர்வாகசபையி னத்தியட்சர்க ளொவ்வொருவரும் எட்டணாவிற்குக் குறையாத மாதசந்தா செலுத்தவேண்டும்" என்னும் விதியை நீக்கிவிடவேண்டுமென்று பிரேரேபித்தனர். இதனை ஸ்ரீமான் ஆர். பி. துரைசாமிமுதலியாரவர்கள் ஆமோதித்தனர். பின் மகாசபையினர் அங்கீகாரம்பெற்று ஷை சட்டம் நீக்கிவிடப்பட்டது.

சென்ற வருடத்திலிருந்த நிர்வாகசபையினரோடு இதனடியிற் குறித்த கனவான்களும் நிர்வாகசபையின் அத்தியட்சர்களாக நியமிக்கப்பெற்றூர்கள்.

ஸ்ரீமான் வி. கோவிந்தராஜபிள்ளையவர்கள்
(மெஸ்ஸர்ஸ் வி. முத்தையாபிள்ளை கம்பெனி)
வர்த்தகர் சென்னை.

,, பி. எம். முருகேசமுதலியாரவர்கள்
Caxton Press, இருளப்பன் வீதி, சென்னை.

,, T. கந்தசாமி ஆச்சாரிஅவர்கள்
Manager, Official Assignee's, Office,
High Court, Madras.

,, தி. சந்திரசேகர முதலியாரவர்கள்
Proprietor, Chandra & Co.

,, யம். கந்தசாமிமுதலியாரவர்கள், B. A.,
Clerk, Accountant General's Office.

ஸ்ரீமான் A. தருமலிங்கமுதலியாரவர்கள்
Vakil's Clerk, ஏழுகிணற்றுவீதி, சென்னை.

ம-ா-ா-ஸ்ரீ வி. நாராயணசாமிமுதலியாரவர்கள், Clerk, Port Trust Office, கணிதபரிசோதகராக நியமிக்கப்பெற்றனர்.

திருவோத்தூர் திருநாவுக்கரசு சுவாமிகள் மடம் ஸ்ரீமத் ம-தி-பாநுகவிசுவாமிகள் இச்சபையின் அருமைபெருமைகளையும் சைவத்தின் ஏற்றத்தையும், விளக்கிச் சுருங்கிய காலவளவிற் கேற்ப மிகவினியதோர் உபநியாசம் செய்து, இச்சபையார் வெளியிட்டு வரும் சைவம் என்னும் பத்திரிகையைச் சைவசமயிகள் ஒவ்வொருவரும்பெற்று வாசிப்பார்களாயின், யாவரும் தங்கள் சமய உண்மைகளை மிக எளிதில் உணர்ந்து உச்சீவித்தற்கும் சைவசமயம் செழித்தோங்குதற்கும் ஏதுவாகுமென்று கூறினார்கள்.

அக்கிராசனம் வகித்த ஸ்ரீமான் யஸ். இரத்தினவேல்செட்டியாரவர்களுக்கும், அங்குவந்திருந்த ஏனைய கனவான்களுக்கும் காரியதரிசியவர்கள் வந்தனமளித்தபின் மீண்டும் நெடுநேரம் தமிழ்வேத பாராயணம் நடைபெற்றபின் சபை கலைந்தது.

சபாக்கிரந்தம் வாசிக்கப்பெற்றபோது இச்சபையார் தாபித்து நடத்தும் வைதிக சைவ அச்சுக்கூடத்தின் பொருட்டுப்பல ஆயுள் சந்தாதாரர்களைச் சேர்த்தூஇதுவரையில் சுமார் 1500 ரூபாவரையில் ஆயுள்சந்தா சேர்த்தனுப்பிய இரங்கோன் ஸ்ரீமான் செவு. சித. சொக்கலிங்கச் செட்டியாரவர்கள், ஸ்ரீமான் மெ. செ. மெ. மெ. இராமநாதன் செட்டியாரவர்கள், இவர்களிருவருக்கும் சைவ நன்னெறியை யுபதேசித்த நல்லாசிரியரும் சைவப்பத்திரிகைக்கு மிக வரிய விஷயதானம் செய்து இச்சபையைப் பலவிதத்திலும் ஆதரிப்பவருமாகிய ஸ்ரீமான் சோளங்கிபுரம் சிவ அருணகிரிமுதலியாரவர்கள் ஆகிய இம்மூவருடைய உருவப்படம் சபையில் வைத்து அங்குவந்திருந்தார் யாவருக்கும் காட்டப்பெற்றது.

இச்சமயத்தில் வாசிக்கப்பெற்ற 19-வது வருடச் சபாக்கிரந்தமும் வரவு செலவு கணக்கும் அடுத்த மாதப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

காரியதரிசி,
இ. ஆதிமூல முதலியார்.